

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் வி.ஜி. சந்தோசம், மேலாண்மை இயக்குநர் வி.ஜி.பி. ரவிதாஸ் மற்றும் வி.ஜி.பி. ராஜாதாஸ் ஆகியோர் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி குடும்பத்தினருடன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முகாம் அலுவலகத்தில் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஆணையத் துணைத் தலைவர் – எழுத்தாளர் இமையம் சந்தித்து தன்னுடைய புதிய சிறுகதைத் தொகுப்பான "தண்டகாரண்யத்தில் சீதை" நூலை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

### கலைஞர் தமிழ் சங்கத்தின் சார்பில் நாளை (27ஆம் தேதி)

# 274 தமிழாசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா!

## மு.தென்னவன் ஏற்பாடு! அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் – தங்கம் தென்னரசு பங்கேற்பு!

சிவகங்கை .டிச. 26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் நிறுவனராக கொண்ட கலைஞர் தமிழ்ச்சங்கம் கடந்த 25ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கன்னித் தமிழ் பாடி கலைஞர் புகழ் பரப்புவோம் என்ற நோக்கத்தில் பல்வேறு தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதன் படி நாளை (27ஆம் தேதி - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் அபூர்வா மஹாலில் 274 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் கலைஞர் தமிழ் சங்க நிறுவனர் மு.தென்னவன், தொழிலதிபர் பி. எல். படிக்காசு, மேயர் எஸ்.முத்துதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. கலைஞர் தமிழ் சங்க செயலாளர் பொறியாளர் தீ. செந்தில்குமார் வரவேற்று பேசுகிறார் .மாநில செய்தி தொடர்பு அணி துணைத்தலைவர் மருது அழகுராஜ் துவக்க உரையாற்றுகிறார்.

விழாவில் 274 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருதினை நிதி அமைச்சர் மண்டல பொறுப்பாளர் தங்கம் தென்னரசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார் . இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக் குமார், எஸ். மாங்குடி, முன்னாள் எம்.எல்.ஏ சுப. துரை ராஜ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். துணை மேயர் காரைக்குடி மாநகரச் செயலாளர் நா. குணசேகரன் நன்றி கூறுகிறார் .

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் தலைமையில் செயலாளர் பொறியாளர் தி. செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.


### கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு இன்று வருகை தரும்

# தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவரை வரவேற்க திரண்டு வாருங்கள்!

## கழகத்தினருக்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அழைப்பு!

கள்ளக்குறிச்சி,டிச.26–

கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு இன்று (டிசம்பர் 26) வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க திரண்டு வாருங்கள் என்று பொதுமக்கள் மற்றும் கழகத்தினருக்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கையில் கூறியதாவது:

கள்ளக்குறிச்சியில் புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகம், புதிய புறநகர் பஸ் நிலையம், பல்வேறு கட்டிடங்கள், வளர்ச்சி திட்ட பணிகளை திறந்து வைக்கவும், உளுந்தூர்பேட்டை புதிய பஸ் நிலையம் உள்ளிட்ட பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று டிசம்பர் 26 (வெள்ளிக்கிழமை) வருகிறார். அன்றைய தினம் காலை 10 மணி அளவில் தியாக துருகம் எல்லையான திம்மலை ரோடு பகுதியில் கள்ளக்குறிச்சி மாவட்ட கழகம் சார்பில் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மிக சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து 10.30 மணி அளவில் கள்ளக்குறிச்சி புதிய பஸ் நிலையத்தையும், 11 மணி அளவில் ஏமப்பேர் ரவுண்டானா சேலம் புறவழிச் சாலை சந்திப்பில் மாவட்ட கழகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையையும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். பின்னர் அவர், 70 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

தொடர்ந்து மதியம் 1 மணி அளவில் புதிய கலெக்டர் அலுவலகத்தையும், மணலூர்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல் அமைச்சர் கலைஞர் அவர்களின் சிலையையும் அவர் திறந்து வைக்கிறார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கொள்ள வருகைதரும் இந்தியாவின் சிறந்த முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தியாகதுருகம் ஒன்றியம் திம்மலை முதல் கள்ளக்குறிச்சி புதிய பஸ் நிலையம், ஏமப்பேர் ரவுண்டானா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறும் இடம், மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம் மற்றும் அங்கிருந்து மணலூர்பேட்டை வரை வழிநெடுக சாலையின் இரு புறமும் முதல் அமைச்சரை வரவேற்க பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் அதிக அளவில் திரண்டு வரவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கூறினார்.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் இறுதி வேட்பாளர்கள் பட்டியல் இன்று (25.12.2025) வெளியிடப் படுவதாக இருந்தது. தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால் தேர்தல் ஆணையாளர் வேண்டுகோளுக்கிணங்க 03.01.2026 அன்று இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும். தேவைப்படின் பணிமனைகள் தோறும் வாக்குப் பதிவு 11.01.2026 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **(மு.சண்முகம், Ex.MP)** |
| சென்னை – 17 | பொதுச்செயலாளர், |
| நாள்: 25.12.2025 | தொ.மு.ச. பேரவை |

### 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# செஞ்சி,மேல்மலையனூர் ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன முழக்கமிட்டனர்!

செஞ்சி டிச 26–

100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் இதற்கு ஒத்து ஊதும் அதிமுகவை கண்டித்தும் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு சட்டத்தை சிதைத்து,அதன் திட்ட பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச் சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலை நாட்களை குறைப்பது, பணியாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது, கிராமங்கள்தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது, என சட்டத்தை திருத்தியும் ,

100 நாள் வேலையே இனி இல்லாமல் செய்வது ,கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்க துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசக்கார சதி செயலையும், அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்யும் அதிமுகவையும் கண்டித்தும்,இந்தச் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும்மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமைதாங்கி தாங்கி கண்டன உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் வழக்கறிஞர் ரங்க பூபதி,ஏ. கே. மணி, தனஞ்செழியன், சையது உஸ்மான், ராசநாயகன்,சூரியமூர்த்தி, சக்திவேல்,உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை அகிலா பார்த்திபன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த்,உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

**மேல்மலையனூர் ஒன்றியம்:**

இதேபோல் மேல்மலையனூர் ஒன்றியதிமுக சார்பில் மேல்மலையனூர் வள்ளலார் கோவில் அருகில் ஒன்றிய பாஜக அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவைகண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாநில விவசாய அணி துணை செயலாளர் செந்தமிழ் செல்வன் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு ஒன்றிய பாஜக அரசையும் ஒத்து ஊதும்அதிமுக அரசை கண்டித்தும் 100 நாள் வேலை உறுதி சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி கண்டன உரை நிகழ்த்தினார். ஆர்ப்பாட்டத்தில்துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போர்க்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் 100 நாள் வேலை திட்டத்தில் ஈடுபடும் பணியாளர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில்100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசையும்,இதற்கு ஒத்து ஊதும் அதிமுகவை கண்டித்தும்,இச்சட்டத்தை திரும்ப வலியுறுத்தி,ஒழிக ஒழிக ஜி ராம்ஜி சட்டம் ஒழிகஎன கண்டன கோஷமிட்டும், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்று அனைத்து நிர்வாகிகளும் உறுதி மொழி ஏற்றனர்.



நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் ஜெகன் ஏற்பாட்டில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் அம்பை ஒன்றிய அ.தி.மு.க. மகளிர் அணி முன்னாள் தலைவர் சிவந்திபுரம் கமலி தலைமையில் சுமார் 50 பெண்கள் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட துணை செயலாளர் மைக்கேல்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன், அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, நெடுஞ்செழியன், பிரேம் ஆனந்த் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி காந்தி நகர் பகுதியில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் சி.நரசிம்மன், பொதுக்குழு உறுப்பினர்கள் தயாநிதி லோகநாதன் பகுதி செயலாளர்கள் என்.பரமசிவம், வன்னியராஜா, மாநகர துணை செயலாளர் தேவநேசன், வட்ட செயலாளர் அரிகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இப் போராட்டத்திற்கு காவேரிப்பாக்கம் ஒன்றிய செயலாளர் பாலாஜி முன்னிலை வகித்தார் காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் தெய்வசிகாமணி வரவேற்புரை நல்கினார் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணையா , சிட்டிபாபு, மாணிக்கம் மற்றும் லட்சுமிபதி நகரச் செயலாளர் பாஸ் என்கிற நரசிம்மன், ஒன்றிய பெருந்தலைவர் அனிதா குப்புசாமி,மாவட்ட பிரதிநிதி வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர் சக்தி மற்றும் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் ஒன்றிய தலைவர் செல்வம், மதிமுக ஒன்றிய செயலாளர் ரவி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் தினேஷ் கார்த்திக் மற்றும் ஏராளமான கழக உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.